133

364-133

தமிழ் நாடு அரசு

பணியாளர் மற்றும் நிருவாக
சீர்திருத்த (பணி ஏ) துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை 600 009.

கடித எண் 7143/பணி ஏ/85-6 நாள் 14.5.85.

அனுப்புநர்
திருமதி செ. அஞ்சலி தயானந்த் இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
சென்னை 5.

ஐயா,

பொருள்: அரசு பணியாளர் நடத்தை விதி - விதி 7 (14) (ஏ) மற்றும் (பி) சில தெளிவுரைகள் - சார்பாக.

பார்வை: அரசு கடித எண் 30777/84-1, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (பணி ஏ) துறை, நாள் 29.5.84.
2. தங்கள் ந.க.எண் 35610/84 ஓ.ந.2 நாள் 20.1.85.

--

பார்வை 1ல் கண்டுள்ள அரசு கடிதத்தில் அரசுப்பணியாளர்கள் முன் அனுமதியின்றி, தாம் பணியாற்றும்/2 ஆண்டுகளுக்கு முன்வரை பணியாற்றிய வருவாய் மாவட்டத்தில் வீட்டு மனை மற்றும் கட்டப்பட்ட வீடு மட்டும் 18.5.82க்கும் 20.3.84க்கும் இடைப்பட்டக் காலத்தில் அடைந்த செயல் தமிழ்நாடு பணியாளர் நடத்தை விதி 7(14)(ஏ)ஐ மீறியதாக கருதப்படும் எனவும், அவ்வாறு அனுமதியின்றி வீடு மற்றும் வீட்டு மனையை அடைந்தவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

2. அரசுப்பணியாளர்கள் தாம் பணியாற்றும்/2 ஆண்டுகளுக்கு முன்வரை பணியாற்றிய வருவாய் மாவட்டத்தில் 18.5.82க்கும் 20.3.84க்கும் இடைப்பட்ட காலத்தில் மனை, வீடு முதலியவற்றை அடையக்கூடாது என்பதில் வாங்குதல் தவிர பிறமுறைகளும் அதாவது கொடையாகவோ, செட்டில்மென்ட் மூலமாகவோ அல்லது பரம்பரைப் பாத்தியதாகப் பெறுதல் தவிர பிற முறைகள் அடங்குமா என அரசின் தெளிவுரை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கோரியுள்ளார். தமிழ்நாடு அரசுப்பணியாளர் நடத்தை விதிகளில் விதி 7(1)(ஏ)ல் உள்ள விளக்கப்படி அசையாச் சொத்து வாங்குதல் அல்லது விற்பனை, கொடை, அடமானம், குத்தகை, மாற்றுமுறை மூலம் செய்யப்படும் நடவடிக்கை நன்மதிப்பு பெற்ற வணிகர் மூலம் நடைபெறாவிடில் குறிப்பிடப்பட்ட அலுவலரது முன் அனுமதி பெற வேண்டும். இடம் பெயராச் சொத்து ஒன்றினை செட்டில்மென்ட் மூலமாக அல்லது கொடையாகப் பெறுவதற்கு வணிகர் மூலம் அடையவேண்டிய அவசியமில்லை, எனவே இந்நேர்வுகளில் வாங்குதல் அல்லது விற்பனை குறித்த நடவடிக்கையினை குறிப்பிடப்பட்ட அலுவலரின் (prescribed authority) முன் அனுமதிபெறத் தேவையில்லை. இருப்பினும் இவ்வாறு கொடை அல்லது செட்டில்மென்ட் வாயிலாக கிடைக்கும் அசையாச் சொத்து அடைவதற்கு அல்லது

விற்பதற்கு முன்னால் அது குறித்த குறிப்பிடப்பட்ட அலுவலருக்கு விதி 7(1)ன்படி அறிவித்தல் வேண்டும். பணியாளர் தம்சொத்து விவர அறிக்கையில் அந்நபரை இடம் பெயராச் சொத்தினைப் பற்றிக் குறிப்பிடுதல் வேண்டுமென தெரிவித்துக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

சிறப்பு ஆணையர் மற்றும் செயலா

நகல்

அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து செயலகத் துறைகள் (அ.ந.மு.பிரிவு).